இலவச பிரதி

Registered as a NewsPaper

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-IV

நாதம் 16 | திருவள்ளுவர் ஆண்டு 2036 | ஆவணி-24 | 09-09-2005 | வெள்ளிக்கிழமை | ஓசை-204




# கட்டுநாயக்கவில் பேச்சுவார்த்தை; விடுதலைப்புலிகள் நிராகரிப்பு!

## குழப்பமும் பதற்றமும் மிக்க இடத்தில் பேசமுடியாது என சு.ப.தமிழ்ச்செல்வன் தெரிவிப்பு

(கிளிநொச்சி)

கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் பேச்சுவார்த்தை நடத்தலாம் என்ற நோர்வேத் தரப்பின் யோசனை விடுதலைப்புலிகளால் நிராகரிக்கப்பட்டுள்ளது. இவ்விடம் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு ஏற்ற சூழலைக் கொண்டதில்லை என நேற்று நோர்வேத் தரப்பு மற்றும் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினருடன் நடந்த சந்திப்பின்போது அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் அவர்கள் புலிகளின் நிலைப்பாட்டை உத்தியோகபூர்வமாகத் தெரிவித்தார்.

இதனை நேற்றுப் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் மற்றும் நோர்வேத் தரப்பினர் உடனான சந்திப்பின் பின் ஊடகவியலாளரிடம் பேசியபோது சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்கள் தெரிவித்தார்.

இவ்வூடகவியலாளர் சந்திப்பில் அவர் அளித்த பதில்கள் வருமாறு;

(IIIஆம் பக்கம் பார்க்க)



## கண்காணிப்புக்குழுவினர்-புலிகள் கிளிநொச்சியில் நேற்று பேச்சு

(அலுவலக செய்தியாளர்)

இலங்கைக்கான நோர்வேத் தூதரக பிரதித்தூதுவர் ஓட்வால், போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுத் தலைவர் ஹக்ரப் ஹெளக்லண்ட் கொண்ட குழுவினர் நேற்று கிளிநொச்சிக்கு வருகை மேற்கொண்டு தமிழீழ அரசியல்துறைப்பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் அவர்களைச் சந்தித்து கலந்துரையாடினர்.

மேற்படி சந்திப்பு விடுதலைப்புலிகளின் சமாதானச் செயலகத்தில் நேற்றுக் காலை 9.45 முதல் பகல் 11.30 வரை நடைபெற்றது.

இதில் விடுதலைப்புலிகளின் தரப்பில் தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன், தமிழீழ காவல்துறைப்பொறுப்பாளர் பா.நடேசன், விடுதலைப்புலிகளின் சமாதானச் செயலகப் பணிப்பாளர் நாயகம் புலித்தேவன், சமாதானச்

(IV ஆம் பக்கம் பார்க்க)

## உயர்மட்ட சந்திப்பிற்கான சாத்தியம், கிழக்கு நிலைமை குறித்தும் ஆராய்ந்தோம்!

### நேற்றைய சந்திப்புக் குறித்து போ.க.குழு தலைவர்

(கிளிநொச்சி)

அரசு-புலிகளுக்கிடையில் உயர்மட்ட சந்திப்புக்கான சாத்தியப்பாடுகள் பற்றியும் கிழக்கின் பாதுகாப்பற்ற நிலைமைகள் பற்றியும் கலந்துரையாடினோம் என போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுத்தலைவர் ஹக்ரப் ஹெளக்லண்ட் தெரிவித்துள்ளார்.

நேற்று கிளிநொச்சியில் விடுதலைப்புலிகளுடனான கலந்துரையாடலின் பின்னர் ஊடகவியலாள

(IV ஆம் பக்கம் பார்க்க)

## வெற்றிலைச் சின்னத்தில் மகிந்தராஜபக்ஷ போட்டி

(கொழும்பு)

சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் சனாதிபதி வேட்பாளர் மகிந்த ராஜபக்ஷ கூட்டணியின் வெற்றிலைச் சின்னத்தின் கீழேயே இம்முறை தேர்தலில் போட்டியிடுகிறார்.

சுதந்திரக்கட்சி, ஜே.வி.பிஉட்பட ஒன்பது கட்சிகள் கடந்த பொதுத்தேர்தலில் இந்தச் சின்னத்தின் கீழேயே போட்டியிட்டன.

(IV ஆம் பக்கம் பார்க்க)



## மகிந்த-ஜே.வி.பி ஒப்பந்தம் நேற்று கைச்சாத்திடப்பட்டது

சனாதிபதி வேட்பாளர் மகிந்த ராஜபக்ஷவிற்கும் ஜே.வி.பியினருக்கும் இடையிலான ஒப்பந்தம் நேற்று கைச்சாத்திடப்பட்டுள்ளது.

சுனாமி நிவாரண சபையை இரத்துச் செய்தல் ஒற்றையாட்சியின் கீழ் வடக்கு கிழக்குப்பிரச்சினைக்குத் தீர்வுகாணுதல் உட்பட 12 விடயங்கள் இந்த ஒப்பந்தத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

(IV ஆம் பக்கம் பார்க்க)

## சவுதி புறப்பட்ட விமானத்தில் குண்டுப்புரளி அவசர வெளியேற்றத்தின்போது ஒருவர் பலி

### 50 பேருக்குக் காயம்

றியாத் நோக்கி நேற்று பிற்பகல் பயணமான விமானத்தில் குண்டு இருப்பதாக வெளியான தகவலையடுத்து அவசரமாகத் தரையிறக்கப்பட்ட விமானத்திலிருந்து பயணிகளை வெளியே எடுக்க போடப்பட்ட வழுக்குப்பாதை உடைந்துவிழுந்ததில் ஒருவர் உயிரிழந்தார். 50 பேர் படுகாயமடைந்தனர்.

கட்டுநாயக்கவிலிருந்து நேற்று பிற்பகல் 1.50 மணியளவில் றியாத்நோக்கிப் பயணமான போயிங்-747sc 781 விமானத்தில் குண்டு இருப்பதாக விமான கட்டுப்பாட்டு நிலையத்திற்கு

(IV ஆம் பக்கம் பார்க்க)



## விசேட அதிரடிப்படை மீது கைக்குண்டு வீச்சு; துப்பாக்கிச்சூடு

### இருவர் பலி; ஆறு பேர் காயம்

(மட்டக்களப்பு)

நேற்று பிற்பகல் 4.30 மணிக்கு தாளங்குடாச் சந்தியிலிருந்து மண்முனை விசேட அதிரடிப்படை முகாம் நோக்கிச் சென்று கொண்டிருந்த விசேட அதிரடிப்படை பொலிஸ் கூட்டு ரோந்து மீது உந்துருளியில் வந்த இருவர் துப்பாக்கி மற்றும் கைக்குண்டுத் தாக்குதல் நடத்தியுள்ளனர். இதில் எம். அமரசிங்க (வயது-30) என்ற விசேட அதிரடிப்படையினரும், இந்திக்க ரட்நாயக்க (வயது-27) என்ற பொலிசாரும் கொல்லப்பட்டுள்ளனர். இதன் போது மேலும் இரு அதிரடிப்படையினரும் நான்கு பொலிசாரும் காயமடைந்துள்ளனர்.

அத்துடன் சம்பவத்தின் போது வீதியால் சென்றுகொண்டிருந்த இரு பொதுமக்களும் காயமடைந்ததாகத் தெரியவருகின்றது. இவர்கள் அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்தவர்களாவர்.

(IV ஆம் பக்கம் பார்க்க)

## வரிவிளம்பரம்

**உடனடியாகத் தேவை**

கிளிநொச்சி கரடிப்போக்குச் சந்தியை அண்டியபகுதியில் ஆசிரியை ஒருவருக்கு தங்குவதற்கு தனி அறை/பகுதி அறைதேவை. தொடர்பு- N/S ஜீவரட்ணம், 28/1 பிரப்பங்குளம்வீதி, யாழ்ப்பாணம். T.P 077-6916199 (சி.12694)

**தவறிவிட்டது**

தாளையடி, செல்லத்தம்பி சசிகரன் என்பவருடைய 2 பாஸ்போட், பி.சான்றிதழ், பொதி என்பவற்றை 07.09.2005 அன்று புளியங்குளத்திற்கும், தாளையடிக்குமிடையில் பேருந்தில் தவறுதலாக எடுத்துச்சென்றவர்கள் கிளி.காவல் பணிமனையில் ஒப்படைக்கவும். நீங்கள் விட்டுச்சென்ற பொதி கிளி.காவல்பணிமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் ஆதாரம் காட்டிப்பெற்றுக்கொள்ளவும். தகவல்: செ.சசிகரன் (6693)

## துரித மீட்டல் வகுப்பு

வெளிவாரி 03ஆம் அணியின் முதலாம் வருட தேர்வுக்கான மீட்டல் வகுப்புக்கள் 10-09,11-09,17-09,18-09 ஆகிய தினங்களில் காலை 09 மணிமுதல் மாலை 05 மணிவரை கல்லூரியில் நடைபெறும்.

**பரீட்சை** 08-10-2005 அன்று ஆரம்பமாகின்றது.

*தகவல்:–*
*அதிபர்,தமிழீழ சட்டக்கல்லூரி,*
*கிளிநொச்சி.*
*07.09.2005.*

(6692)

## அறிவித்தல்

**வவுனியா ப. நோ.கூ. சங்கம் உறுப்பினர் பட்டியல் காட்சிப்படுத்தல்.**

வவுனியா பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் கிளைப் பொதுச் சபைக்கூட்டத்தில் பங்குபற்றி வாக்களிக்க தகுதிபெறும் உறுப்பினர்களின் கிளை ரீதியான பட்டியல் அவ்வக்கிளை நிலையங்களிலும், சகல கிளைகளினது பட்டியல்கள் சங்கத்தின் தலைமைப் பணிமனையிலும் 05.09.2005 ஆம் திகதி தொடக்கம் 19.09.2005 ஆம் திகதிவரை உறுப்பினர்கள் பார்வையிடுவதற்காக காட்சிப்படுத்தப்பட்டிருக்கும்.

தற்போது இயங்காதிருக்கும் நொச்சிமோட்டை, இரணை இலுப்பைக்குளம் ஆகியவற்றைச் சேர்ந்த கிளை அங்கத்தவர்கள் காட்சிப்படுத்தப்பட்டிருக்கும் பட்டியல்களைச் சங்கத்தின் தலைமைப் பணிமனையில் பார்வையிடலாம்.

காட்சிப்படுத்தப்படும் காலத்துக்குள் உறுப்பினர்களிடையே இருந்து எழுத்து மூலம் சமர்ப்பிக்கும் ஆட்சேபனைகள், மேன்முறையீடுகள் எதிர்வரும் 20.09.2005 ஆம் திகதிக்கு முன்பதாகக் கிடைக்கக் கூடியதாக

"பொதுச் செயலாளர்,
வ.ப.நோ.கூ.சங்கம்,
பொதிமண்டப வீதி,
வவுனியா." என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

வ.ப.நோ.கூ. சங்கம்,
வவுனியா,
01.09.2005. (சி.12680)

ந. சிவகுமாரன்,
பொதுச்செயலாளர்.

## தொழிற்பயிற்சிச் சான்றிதழ், தொழிலுபகரணம் வழங்கல்

(அலுவலக செய்தியாளர்)

மாவீரர், போராளிகள் குடும்ப நலன் காப்பகத்தின் பெண்கள் வேலைத்திட்டப் பகுதியினரால் ஒளிர்வன்னி ஆடைத்தொழிலகத்தில் பயிற்சி வழங்கப்பட்டு ஒளிர் தையலகங்களில் வேலை வாய்ப்பு பெறுபவர்களுக்கு தொழிற்பயிற்சிச் சான்றிதழ், தொழில் உபகரணம், தொழில்நிலைய புதிய கட்டடத்திற்கான நிதி என்பன வழங்கும் நிகழ்வு நாளை பத்தாம் திகதி காலை ஒன்பது மணிக்கு கிளிநொச்சி ஜெயந்தி நகரிலுள்ள ஒளிர்வன்னி ஆடைத்தொழிலகத்தில் நடைபெறவுள்ளது. இந்நிகழ்வில் அனைவரையும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் மாவீரர், போராளிகள் குடும்பநலன் காப்பக பெண்கள் வேலைத்திட்டப் பகுதியினர் வேண்டியுள்ளனர். (சோ)

## ஒப்பந்த ஆங்கில ஆசிரியர் கவனத்திற்கு

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி கல்வி வலயப் பாடசாலைகளில்2002, 2003,2004, 2005ஆம் ஆண்டுகளில் ஒப்பந்த அடிப்படையில் பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களாகக் கடமையாற்றியோர் கீழ்க்குறிப்பிடப்படும் ஆவணங்களுடன் 12.09.2005 ஆம் திகதி முற்பகல் 9.00 மணிக்கு வலயகல்வி அலுவலகத்திற்கு தவறாது சமுகம் தருமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

ஏற்கனவே விபரம் தந்தவர்களும் தேசிய அடையாள அட்டை, பிறப்புச் சான்றிதழ்,க. பொ.த. (சாதாரணம்), க.பொ.த (உயர்தர) சான்றிதழ், வழங்கப்பட்ட அனைத்து பகுதிநேர ஆங்கில ஆசிரிய நியமனக் கடிதங்கள் ஆகியவற்றுடன் தவறாது உரிய நேரத்தில் சமுகம் தருமாறு வலயகல்விப்பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (கு)

## துயர்பகிர்கின்றோம்

**அமரர்**

**திரு.குமாரசாமி அருளம்பலம்**

(பழையறோட், கனகராயன்குளம்)

**பிறப்பு 20-01-1924 இறப்பு 31-08-2005**

எமது வவுனியா வடக்கு பிரதேச முன்பள்ளி உதவிக்கல்விப் பணிப்பாளர் அ. விநாயகமூர்த்தி அவர்களின் தந்தையின் இழப்பால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

தகவல்:-
*இணைப்பாளர்,பணியாளர்கள்,*
*நெடுங்கேணி அபிவிருத்தி புனர்வாழ்வு நிறுவனம்,*
*கனகராயன்குளம்.*

(சி-12646)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



பிறப்பு 10 - 08 - 1921

இறப்பு 10 - 08 - 2005

**அமரர் சூரியர் தம்மையா**

(முன்னை நாள் கிராமசபைத் தலைவரும், நட்டாங்கண்டல் முத்துமாரியம்மன் பூசகர் (முன்னைநாள்)

கடவுளின் தொண்டனாய்
சமூக சேவையாளராய்
பார் போற்ற வாழ்ந்தீர்கள்
நீங்கள் மறைந்து மூ பத்து
நாட்கள் முழுதாய் மறைந்தாலும்
எம் நெஞ்சில் என்றும்
ஒளியாய் வீற்றிருப்பீர்கள்.

தகவல்:-
**பிள்ளைகள்,**
**மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள்,**
**பூட்டப்பிள்ளைகள்.**

நட்டாங்கண்டல்,
பாண்டியன்குளம். (சி-12696)




# கட்டுநாயக்கவில்....

**இன்றைய சந்திப்பில் முக்கியமாக என்ன விடயம் பேசப்பட்டது?**

இன்று முக்கியமாக இப்பொழுது ஏற்பட்டிருக்கின்ற சூழ்நிலைகள் பற்றி விவாதிப்பதே முக்கிய நோக்கமாக இருந்தது அதில் குறிப்பாக, அண்மைக்காலமாக எமது போராளிகள் மீதும், அரசியல்துறைச் செயலகங்கள் மீதும் நடத்தப்படும் தாக்குதல்களும் அதன் காரணமாக பல போராளிகள் கொல்லப்பட்டுள்ளமை காரணமாக எங்களுடைய தலைமைப்பீடம் ஒரு தீர்க்கமான முடிவை எடுத்திருக்கின்றது.

இந்த ஒப்பந்த விதிமுறைக்கமைய இந்த யுத்த நிறுத்த உடன்பாட்டின் நடைமுறைக்கமைய எங்களுடைய அரசியல் போராளிகள் வடக்கு-கிழக்கிலுள்ள தமிழர் தாயகப் பிரதேசத்தினுடைய அனைத்து பகுதிகளிலும் அரசியல் பணிகளை மேற்கொள்ள வேண்டும் என்பதும், அவர்கள் சுதந்திரமாக மக்கள் பணிகள், அரசியல் பணிகளை முன்னெடுப்பது என்பதும் இந்த ஒப்பந்த விதிமுறைப்படி ஏற்றுக்கொள்ளப்பட்டதொன்று. ஆனால், அது அண்மைக் காலத்தில் கேள்விக்குறியாக்கப்பட்டுள்ளது. அச்சுறுத்தலுக்குள்ளாக்கப்பட்டிருக்கின்றது. அந்த நிலையில் நாங்கள் எங்களுடைய போராளிகளை இப்பொழுது எங்களுடைய பகுதிகளுக்குள் மீள வரவழைத்திருக்கின்றோம். பாதுகாப்பு உத்தரவாதம் இல்லாத நிலையில் போராளிகள் இனியும் அரசியல் பணிகளை மேற்கொள்வதில் சாத்தியம் இல்லை. ஆகவே, அரசியல் அலுவலகங்களை மூடி எங்கள் போராளிகளை நாங்கள் எங்கள் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களுக்குள் பின் நகர்த்தியிருக்கின்றோம். எமது தலைமைப்பீடத்தின் நிலைப்பாட்டை அதிகாரபூர்வமாக கண்காணிப்புக் குழுவுக்கு எடுத்து விளக்குவது இன்றைய சந்திப்பினுடைய முதல் முக்கிய நோக்கமாக இருந்தது. அடுத்தது யுத்த நிறுத்த அமுலாக்கம் பற்றிய பேச்சுவார்த்தைகள் பற்றி வெளியான செய்திகளுக்கு எங்களுடைய தலைமைப்பீடத்தினுடைய நிலைப்பாட்டையும், விளக்கத்தையும் இன்றைக்கு தெளிவுபடுத்தியிருக்கின்றோம்.

**☐ கட்டுநாயக்கவில் பேச்சுவார்த்தை நடாத்துவது குறித்து உங்கள் நிலைப்பாடு என்ன?**

நாங்கள் ஏற்கனவே சிறிலங்காவினுடைய கட்டுப்பாட்டுப் பகுதியினுள் பேச்சுவார்த்தை நடத்துவது சாத்தியம் இல்லை என்பதை தெரியப்படுத்தியிருக்கின்றோம். அந்த அடிப்படையில்தான் நாங்கள் கிளிநொச்சி அல்லது வேறு ஏதாவது நடுநிலையான நாடு ஒன்றில் நடத்துவதற்கு எங்கள் இணக்கப்பாட்டைத் தெரிவித்திருந்தோம். தற்போது நோர்வே ஒரு ஆலோசனையை முன்வைத்திருக்கின்றது. அந்த ஆலோசனையிலுள்ள சிக்கல்களை, நெருக்கடிகளைப் பற்றி நாங்கள் இன்றைக்கு தெளிவாக்கியிருக்கின்றோம். ஏனெனில், அவர்கள் தந்திருக்கின்ற விளக்கம் பேச்சுவார்த்தைகளுக்கு போகின்றபோது கட்டுநாயக்க விமான நிலையத்தில் தரித்துச் செல்வதால் அது ஒரு பாதுகாப்பான சூழலை கொண்ட இடமாக அவர்கள் குறிப்பிட்டிருந்தார்கள். உண்மையிலே போக்குவரத்துக்கள் செய்கின்றபொழுது தரித்துச் செல்வதென்பது வேறு, பேச்சுவார்த்தைகளை நடத்துவதற்கான உகந்த சூழல் என்பது வேறு. அதாவது, இரண்டு பிணக்குகளுக்குரிய-முரண்பாட்டுக்குரிய தரப்புக்கள் பேச்சுக்களை முன்னெடுப்பதாயின் அது ஒரு சுமுகமான, இயல்பான சூழலில் நடைபெறவேண்டும். எந்த வித நெருக்குவாரங்கள் இறுக்கங்கள், பதற்றங்கள் உள்ள இடங்களைத் தவிர்த்து கொள்வதுதான் பொருத்தம். இதுதான் உலக நடைமுறையாகவும் இருக்கின்றது. அந்த அடிப்படையில்தான் மூன்றாம் நிலை நாடுகளில் ஏதாவது ஒரு இடத்தில் வைத்து பேச்சுக்களை முன்னெடுத்துச் செல்வது வழமை. அந்த அடிப்படையில்தான் இந்த நிலைப்பாட்டை விளக்கியிருக்கின்றோம். தெற்கைப் பொறுத்தவரை சிறிலங்காவின் தலைநகரை பொறுத்தவரையில் அது கட்டுநாயக்கவாக இருக்கலாம், கொழும்பாக இருக்கலாம் இப்பொழுது ஒரு பதற்றமான சூழல் இருக்கின்றது. அரசியல் குழப்பங்களும், பதற்றமான தொருசூழல் இருக்கின்ற இடத்தில் சென்று பேச்சுக்களை இயல்பாக முன்னெடுக்க முடியாது. ஆகவே, எங்களுடைய கருத்தை, நிலைப்பாட்டை நோர்வேத் தரப்புக்கு அதிகாரபூர்வமாக முன்வைத்துள்ளோம். விரைவில் இந்த யுத்த நிறுத்த அமுலாக்கத்திற்கு விரைவில் பேசவேண்டிய அவசியத்தை நாங்கள் வலியுறுத்தியிருக்கின்றோம். ஆகவே, இதற்கு ஒரு நடுநிலைமையான மூன்றாம் தரப்பினுடைய இடம்தான் பொருத்தமானது என்பதை சுட்டிக் காட்டினோம். ஒஸ்லோ தலைநகரை நிராகரித்தாலும், வேறு ஏதாவது ஒரு நடுநிலையான நாட்டில் இந்தப் பேச்சுவார்த்தைகளை முன்னெடுக்கலாம். அப்படி ஒரு சூழலில் முன்னெடுப்பதுதான் பொருத்தமானது. இது இரண்டு தரப்புக்கும் ஒரு பக்கச்சார்பில்லாத முடிவை நோர்வேத் தரப்பு எடுக்க வேண்டும் என்றுகூட நாங்கள் கூறியிருக்கின்றோம்.

**☐ தற்போதுள்ள நெருக்கடியான நிலைமைக்கு தீர்வு காண்பதற்கு ஏதாவது யோசனைகளை நோர்வேத் தரப்பு அரச தரப்பிடமிருந்து கொண்டு வந்தார்களா?**

எந்தவிதமான யோசனைகளையும் கொண்டுவரவில்லை. இது அண்மைக் காலத்தில் எங்களுடைய போராளிகள் தொடர்ந்தும் தாக்கப்படுகின்றார்கள், கொல்லப்படுகின்றார்கள். எங்களுடைய அலுவலகங்கள் குண்டு வீசித் தாக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. ஆகவே, இந்த நிலைமையை சீர்செய்யாமல் நிச்சயமாக எந்த முன்னேற்றமும் வரப்போவதுமில்லை. ஆகவே, இந்தத் தீவிரத் தன்மையை உணர்ந்து உடனடியாக அரச தரப்பை ஒரு நிலைப்பாட்டுக்கு கொண்டுவரவேண்டும் என்பதை வலியுறுத்தியிருக்கின்றோம். அண்மையில் இணையத்தளங்களில் வெளிவந்த ஒரு செய்தி கருணா குழுவை கண்காணிப்புக் குழு சந்தித்ததாக. அதைப் பற்றி நாங்கள் அவர்களிடம் விளக்கத்தைக் கேட்டோம். தாங்கள் அரச கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் ஒரு சிலரைச் சந்தித்ததாகக் கூறினார்கள். தாங்கள் அவர்களைச் சந்தித்ததின் நோக்கம் இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் ஆயுதக் குழுக்கள் எதுவும் இல்லை. இராணுவத் தரப்பு எந்த ஆதரவையும் கொடுக்கவில்லை என்று அரசாங்கம் மறுத்துக் கொண்டிருக்கின்ற சூழலில் அவர்களுடைய கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் தாங்கள் அவர்களைக் கண்டதும், சந்தித்ததும் அதை உறுதிப்படுத்தி இலங்கை அரசாங்கத்திற்கு ஆதாரபூர்வமாக வலியுறுத்துவதற்காகவே எனக் கூறினார்கள். ஆகவே, இப்பொழுது ஆயுதக் குழுக்களைப் படைத்தரப்பும், இலங்கை அரசாங்கமும் எப்படி ஒழுங்கமைத்து செயற்படுத்துகின்றது என்பது உலகறிந்த உண்மையாக இருக்கின்றது. இந்த நிலையில் யுத்த நிறுத்த உடன்பாட்டினுடைய அடிப்படைக் கோட்பாடுகள், கருத்துக்கள்கூட அதில் தகர்த்தெறியப்படுகின்ற நிலைமைதான் உருவாகின்றது. வடக்கு-கிழக்கு தமிழர் தாயகப் பிரதேசத்தில் இந்த ஆயுதக் குழுக்களுடைய செயற்படுகளை இல்லாதொழிக்க வேண்டும். ஆயுதங்களைக் களையப்பட்டு வெளியேற்றப்பட வேண்டும் என்பது ஏற்றுக்கொள்ளப்பட்ட நடைமுறை. இலங்கை அரசாங்கம் ஏற்றுக்கொள்ளப்பட்ட நடைமுறையை மீறி குழப்பத்தையும், யுத்த நிறுத்த சூழலையும் ஒரு நெருக்கடிக்குக் கொண்டு வருகிறது. சமாதான முன்னெடுப்புக்களை மறைமுகமான முயற்சி மூலம் குழப்பி வருகின்றது என்பதை எல்லோரும் அறிந்த செய்தியாக அது வெளிப்பட்டிருக்கின்றது.

**☐ உத்தியோகபூர்வமற்ற நகர்வுகள் தான் தொடர்ச்சியாக சிறிலங்கா அரசாங்கத்தால் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றது. தொடர்ச்சியாக இதனை நீங்கள் நம்பிக் கொண்டிருக்கின்றீர்களா? தமிழ் மக்களுக்கு நல்ல பதில் வரும் என்று?**

சர்வதேச சமூகத்தினுடைய அனுசரணைகளும் ஈடுபாடுகளும் இதில் அதிகம் இருப்பதால் சர்வதேச சமூகத்திற்கு இங்குள்ள நிலைமைகளை, தீவிரத் தன்மைகளை எடுத்துவிளக்குவது எங்களுடைய கடப்பாடாக இருக்கின்றது. அந்த அடிப்படையில் தற்போதுள்ள சூழ்நிலைகள் பற்றி எடுத்து விளக்கியிருக்கின்றோம். முக்கியமாக இவ்வளவு காலப்பகுதியில் இப்பொழுது பாரிய நெருக்கடி ஏற்பட்டிருக்கின்றது. இப்பொழுது எங்களுடைய அரசியல் பணிகளில் ஈடுபட்டுக்கொண்டிருக்கின்ற போராளிகள் தங்களுடைய அலுவலகங்களை மூடி எங்களுடைய பிரதேசங்களுக்கு வந்திருக்கின்றார்கள். இது முக்கியமான செய்தி. ஆகவே, இந்த நிலைமையில் கண்காணிப்புக் குழுவும் அனுசரணையாளர்களும் அரச தரப்போடு பேசி ஒரு தீர்க்கமான முடிவை எடுக்க வேண்டிய கட்டத்திற்கு அவர்கள் வந்திருக்கின்றார்கள். அந்தப் பணியை அவர்கள் நிச்சயமாகச் செய்வார்கள் என்றுதான் இப்பொழுது நாங்கள் நம்புகின்றோம்.

**☐ உயர்மட்ட மாநாடு சாத்தியம் இல்லாத பட்சத்தில் நெருக்கடிக்கு தீர்வுகாண என்ன வழியில் முயற்சிகளை மேற்கொள்வீர்கள்?**

நெருக்கடிக்கு தீர்வுகாண வேண்டுமென்றால் இரண்டு தரப்பும் நிச்சயமாகச் சந்தித்துப் பேசியே ஆகவேண்டும். அமைதி, சமாதான முயற்சிகளினுடைய அனைத்து முன்னெடுப்புகளினுடைய அடிப்படையாக இருப்பது யுத்த நிறுத்த உடன்படிக்கை. இந்த யுத்த நிறுத்த அமுலாக்கம் மிக மிக முக்கியமானது. இந்த யுத்த நிறுத்த அமுலாக்கம் பற்றி இரண்டு தரப்பினுடைய உயர்மட்டக் குழுவும் பேசி ஒரு உறுதியான தீர்மானத்திற்கும், இணக்கப்பாட்டிற்கும் வரவேண்டும். ஆகவே, அதற்கான முயற்சிகளையும், இணக்கப்பாட்டையும் ஏற்படுத்திக் கொள்வதிலேயே அனுசரணையாளர்கள் தீவிரமாகச் செயற்படுகின்றார்கள் என்று நாம் நம்புகின்றோம்.

**☐ அப்படி ஒரு சந்திப்பு ஏற்பட முடியாத பட்சத்தில் யுத்த நிறுத்த உடன்படிக்கை கேள்விக்குறியாகுமா?**

யுத்த நிறுத்த உடன்படிக்கை இப்பொழுது கேள்விக்குறியான நிலையில் வந்திருப்பதால் தான் இந்த உயர்மட்ட சந்திப்புத்தேவை என்பதும் அதற்கு சில ஆணித்தரமான தீர்மானங்கள் எடுக்க வேண்டியது என்பதும் அவசியப்பட்டுவிட்டன.

**☐ உயர்மட்ட சந்திப்பு நடக்கும் என்று நீங்கள் நினைக்கின்றீர்களா?**

நாங்கள் எப்போதும் எல்லாவற்றையும் நினைத்துக் கொண்டேதான் செய்து வருகின்றோம். ஆனால், நினைப்பதெல்லாம் நடந்ததாக இல்லைத்தான். அது இரண்டு தரப்பினுடைய கைகளிலேதான் இருக்கின்றது. ஆகவே, ஒரு தரப்பு என்ற ரீதியில் இலங்கை அரசாங்கமும் இலங்கைப் படைகளும் இந்த யுத்த நிறுத்த சூழலைப் பாதுகாக்க வேண்டும். சமாதான முன்னெடுப்புக்களை உறுதியாக முன்னெடுக்க வேண்டும் என்ற அர்ப்பணிப்பு அவர்களிடம் இருக்குமேயானால் நடக்கும்.

**☐ சனாதிபதித் தேர்தல் வரவிருப்பதையொட்டி சிங்கள வேட்பாளர்கள் தமிழ் மக்களுடைய வாக்குகளை சேகரிப்பதற்கான வாக்குறுதிகளை அளித்து தமிழ் மக்கள் தங்கள் பக்கம் என்று தமிழ் மக்களை குழப்புவதற்கான நடவடிக்கையில் ஈடுபட்டிருக்கின்றார்கள். இந்த வகையில் தாயகப் பகுதியில் வாழ்கின்ற தமிழ் மக்களுக்கு ஏதாவது செய்தி இருக்கின்றதா?**

எங்களுடைய மக்களைப் பொறுத்த வரை இந்த சனாதிபதித் தேர்தலைப் பற்றி அவர்கள் பெரிதாக அலட்டிக் கொள்ளவில்லை. ஏனெனில், மாறி மாறி வந்த சிங்கள தலைமைகள் தமிழ் மக்களுக்கு எதைச்செய்திருக்கின்றார்கள் என்பது எல்லோருக்கும் தெரிந்ததொன்று.

இப்பொழுது தமிழ் மக்களுடைய வாக்குகளை கவர்வதற்காக அவர்கள் செயற்படுவது என்பதைவிட தமிழ் மக்களுக்கு எதிரான நடவடிக்கைகளை எப்படித் தாங்கள் முன்னெடுப்போம் என்பதை சிங்கள மக்களுக்கு இனவாதக் கருத்துக்களை வெளிப்படுத்துவதில்தான் தீவிரமாகச் செயற்படுகின்றார்கள் என்பதை நாங்கள் உணரக்கூடியதாகவுள்ளது. தமிழ் மக்கள் நன்கு சிந்தித்து தீர்க்கமான முடிவு எடுப்பார்கள். எங்கள் மக்கள் எப்பவோ தீர்க்கமான முடிவை எடுத்துவிட்டார்கள்.

**☐ மலையக மக்கள் முன்னணித் தலைவர் சந்திரசேகரன் தமிழ்க் கட்சிகள் எல்லாவற்றையும் சேர்த்து ஒரு வேட்பாளர் ஒருவரைநிறுத்துவதற்கு ஆராய்ந்து வருகின்றார். அதற்கும் உங்களுக்கும் ஏதாவது தொடர்பு இருக்கின்றதா?**

சிறிலங்காவின் தெற்கிலே வாழ்கின்ற எங்களுடைய மக்கள் சூழ்நிலை கருதி அவர்கள் அந்த தேசத்திலும் அந்த சூழலிலும் வாழ்கின்றார்கள். அவர்கள் அங்குள்ள சூழ்நிலையைப் பொறுத்து சில அரசியல் அவர்களுக்கு தவிர்க்க முடியாததாக இருக்கும். இனிவரும் காலத்திலுள்ள சூழ்நிலைகளைப் பொறுத்துத்தான் தமிழர் தேசம் எப்படி சிங்கள தேசத்தில் வாழ்கின்ற எங்களுடைய மக்களுக்கு ஆதரவு, ஒத்துழைப்புக்களை வழங்குவது என்பது சம்பந்தமாக நாங்கள் தீவிர மாக ஆராய்ந்து தான் இம்முடிவுகளை எடுக்க வேண்டும். ஆகவே, நாங்கள் பத்திரிகை வாயிலாகத்தான் இந் செய்திகளை அறிந்து கொண்டிருக்கின்றோம். நாங்கள் விரைவில் தமிழ் கட்சிகளை, கூட்டமைப்பினரை மற்றும் ஏனைய தமிழ் கட்சியினரை யும் சந்தித்துப் பேச இருக்கின்றோம். அதன் பின்னர்தான் எல்லா அரசியல் நகர்வுகளைச் செய்வது என்பது பற்றித் தீர்மானம் எடுக்க இருக்கின்றோம். (தீ)




# ஒஸ்லோ ,டோக்கியோ பிரகடனங்களை ராஜபக்ஷ ஏற்கிறாரா? ஐ.தே.க. கேள்வி

சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க ஏற்றுக்கொண்டுள்ள ஒஸ்லோ மற்றும் டோக்கியோ பிரகடனங்களுக்கு ஏற்ப சமாதான நடவடிக்கைகளை முன்கொண்டு செல்வாரா இல்லையா என்பதை சுதந்திரக்கட்சி வேட்பாளர் மகிந்தராஜபக்ஷ நாட்டிற்குத் தெரிவிக்க வேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சி வலியுறுத்தியுள்ளது.

மகிந்தராஜபக்ஷவுக்கும், ஜே.வி.பிக்கும் இடையில் இணக்கப்பாடு காணப்பட்டுள்ள 12 நிபந்தனைகளில் 10 நிபந்தனைகள் யுத்தத்தை மீண்டும் ஏற்படுத்தக் கூடியவை என்று ஐக்கிய தேசியக்கட்சியின் பிரதிப் பொதுச்செயலாளரும், ஊடகப் பேச்சாளருமான திஸ்ஸஅத்தநாயக்க தெரிவித்தார்.

இந்த 12 நிபந்தனைகளையும் நடைமுறைப்படுத்தினால் சனாதிபதியாக நியமனமாகும் ஒருவரால் கூட யுத்தத்தைக் கட்டுப்படுத்த முடியாத நிலை ஏற்படும் என்றும் அவர் கூறினார்.

அரும்பாடுபட்டு நிறுத்தி வைத்துள்ள யுத்தம் இந்த நிபந்தனைகளால் மீண்டும் ஏற்படக் கூடிய அபாயம் இருப்பதாகவும் கூறிய திஸ்ஸ அத்தநாயக்க, ஒஸ்லோ மற்றும் டோக்கியோ பிரகடனங்கள் சமாதானத்திற்கான அடித்தளங்களைப் போட்டிருந்ததாகவும் அதனை மகிந்தராஜபக்ஷ ஏற்றுக்கொள்கிறாரா இல்லையா என்பதை நாட்டிற்கு வெளிப்படுத்த வேண்டும் என்றும் கூறினார்.

### -யாழ்.இந்துக்கல்லூரி மாணவன்-

## க.பொ.த.உயர்தர கணிதப் பிரிவில் அகில இலங்கை ரீதியில் முதலிடம்

(கிளிநொச்சி)

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி மாணவன் சிவப்பிரகாசம் மயூரன் கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சையில் கணிதப் பிரிவில் அகில இலங்கை ரீதியில் முதலாமிடத்தில் சித்தி எய்தியுள்ளார்.

நேற்று முன்தினம் இணையத்தளமூடாக வெளியான பரீட்சைப் பெறுபேறுகளின் மூலம் இவர் கணிதப்பிரிவில் ஆகக்கூடுதலான புள்ளிகளைப்பெற்று அகில இலங்கை ரீதியில் முதலாமிடத்தில் சித்தி எய்தியுள்ளமை வெளியாகியுள்ளது.

அல்லாரையைப் பிறப்பிடமாகக் கொண்ட சிவப்பிரகாசம் மயூரன் ஆரம்பக்கல்வியை சாவகச்சேரி இந்துக்கல்லூரியில் கல்வி கற்று பின்னர் யாழ்.இந்துக்கல்லூரியில் இணைந்து கல்வி கற்றுவந்தமை குறிப்பிடத்தக்கது.

## ஊடகவியலாளர் பயிற்சிக்கு சென்றோர் மீது பொலிசார் விசாரணை

பி.பி.சியின் ஊடகவியலாளர் பயிற்சி முகாமில் கலந்து கொள்ளச் சென்ற ஊடகவியலாளர்கள் நேற்று காலை 10.00 மணியளவில் தம்புள்ளையில் வைத்து பொலிசாரால் மடக்கிப் பிடிக்கப்பட்டு விசாரணைகள் மேற்கொள்ளப்பட்ட பின்னர் விடுவிக்கப்பட்டுள்ளனர். பயிற்சிக்கான ஒப்படை ஒன்றிற்காக தம்புள்ளையில் படங்கள் பிடித்துக் கொண்டிருந்த யாழ்ப்பாணம், திருகோணமலை, கொழும்பு, அம்பாறை மாவட்டங்களைச் சேர்ந்த தமிழ், சிங்கள ஊடகவியலாளர்களே இவ்வாறு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர் எனத் தெரியவருகின்றது.

### நாளை போட்டி ஆரம்பம்

நியூஸ்ரார் விளையாட்டுக்கழகம் நடாத்தும் பூப்பந்தாட்டப் போட்டிக்கு விண்ணப்பித்தவர்களும், புதிதாக விண்ணப்பிக்க விரும்புவோரும் நாளை மாலை 06 மணிக்கு கிளிநொச்சி இளையோர் செயற்பாட்டு நிறுவனத்திற்கு போட்டிக்காக சமுகம் தருமாறு நியூஸ்ரார் விளையாட்டு கழகத்தினர் கேட்டுள்ளனர்.

## வடக்கு கிழக்கில் 15 வலயங்களில் 1434 பட்டதாரிகளுக்கு ஆசிரியர் நியமனம்

பொருத்தமான அரச துறைப் பதவிகளில் பட்டதாரிகளை ஆட்சேர்ப்புச் செய்யும் திட்டத்தின் கீழ் வடக்கு கிழக்கு மாகாணத்தில் 15 வலயங்களில் தமிழ் மொழிமூல அரசாங்கப் பாடசாலைகளிற்கு பட்டதாரிகளை இலங்கை ஆசிரியர் சேவையின் 3-1ஆம் தர ஆசிரியர்களாக 1434 பேர் நியமனம் பெற்றுள்ளனர்.

மூதூர் வலயம்-14, யாழ்ப்பாணம் வலயம்-75, கந்தளாய் வலயம்- 05, கிளிநொச்சி வலயம்-254, தீவக வலயம் -73, திருகோணமலை வலயம்-14, துணுக்காய் வலயம்-61, மன்னார் வலயம்-133, மடு வலயம்-67, முல்லைத்தீவு வலயம்-176, தென்மராட்சி வலயம்-55, வடமராட்சி வலயம்-97, வவுனியா தெற்கு வலயம்-101, வவுனியா வடக்கு வலயம்-115, வலிகாமம் வலயம்-194 இவர்களது பெயர்ப்பட்டியல் ஏ-9 வீதியிலுள்ள ஈழநாதம் பணிமனையில் பார்வையிடலாம்.

## மட்டு-கொக்கோகோல சந்தியில் இளைஞன் சுட்டுக்கொலை

மட்டக்களப்பு சின்ன ஊறணி கொக்கோகோல சந்தியில் நேற்று முன்தினம் இராணுவத்தினர் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் தமிழ் இளைஞர் ஒருவர் கொல்லப்பட்டுள்ளார்.

இராணுவ பொலிஸ் நிலையம் மீது உந்துருளியில் சென்ற நபர்களினால் கைக்குண்டு வீசப்பட்டு அது வெடித்துச் சிதறியதில் இராணுவச் சிப்பாயான ஆ.வி.சுவர்ணசிறீ என்பவர் காயமடைந்துள்ளார். இதனையடுத்து இராணுவத்தினர் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் அந்த இளைஞர் கொல்லப்பட்டுள்ளதாகப் படையினர் தெரிவித்துள்ளனர். கொல்லப்பட்ட இளைஞர்தான் கைக்குண்டை வீசியவர் என்றும், இவரிடமிருந்து மைக்ரோ ரககைத்துப்பாக்கியும் வெடிக்காத கைக்குண்டொன்றும் கைப்பற்றப்பட்டதாகவும் பொலிசார் தெரிவித்தனர். இவருடன் உந்துருளியில் சென்ற மற்ற இளைஞர் கைது செய்யப்பட்டுள்ளார் என்றும் அந்தத் தகவல்கள் தெரிவிக்கின்றன. சம்பவத்தின்போது கொல்லப்பட்டவர் மட்டக்களப்பு மாமாங்கம் பகுதியைச் சேர்ந்த சிங்கரத்தினம் கமலாசன் என்றும், கைது செய்யப்பட்டவர் மட்டக்களப்பு காயான்மடுப் பகுதியைச் சேர்ந்த சின்னத்தம்பி பாலேஸ்வரன் என்றும் தெரியவருகிறது. இச்சம்பவத்தையடுத்து பொலிசாரும் இராணுவத்தினரும் பரவலாக மேற்கொண்ட துப்பாக்கி வேட்டுக்களினால் சுமார் 15 நிமிடங்கள் வரை அப்பகுதியில் பதற்ற நிலை காணப்பட்டது எனத் தெரிவிக்கப்படுகிறது.

### கண்காணிப்புக்...

செயலகத்தைச்சேர்ந்த செல்வி மற்றும் ஜோர்ஜ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இலங்கைக்கான நோர்வேத் தூதரக பிரதித் தூதுவர் ஓட்வால், போர்நிறுத்தக் கண்காணிப்புக்குத் தலைவர் ஹக்ரப் ஹொக்லண்ட் அடங்கிய குழுவினர் கலந்து கொண்டனர்.முன்னதாக நேற்றுக் காலை 9.30 மணிக்கு உலங்கு வானூர்தி மூலம் கிளிநொச்சிக்கு வருகைதந்த நோர்வேயின் இலங்கைக்கான பிரதித்தூதுவர், கண்காணிப்புக்குழுத் தலைவர் அடங்கிய குழுவினரை விடுதலைப்புலிகளின் சமாதானச் செயலகப் பணிப்பாளர் நாயகம், சமாதானச் செயலகத்தைச் சேர்ந்த சுடர்மணி ஆகியோர் வரவேற்று சமாதானச்செயலகத்திற்கு அழைத்துச் சென்றனர். (சோ)

எங்கள் உணர்வு சர்வஉலகிற்கு கேட்க
பொங்கி எழுவோம் முல்லையிலும் வாரீர்.
முல்லை. மாவட்ட எழுச்சி நாள் செயலணி

### மகிந்த...

அலரி மாளிகையில் நடைபெற்ற இந்த வைபவத்தில் ஜே.வி.பி. மற்றும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்கள் பலர் கலந்து கொண்டனர்

ஒப்பந்தத்தில் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவும் ஜே.வி.பி.சார்பில் அதன் செயலாளர் டில்வின் சில்வாவும் கைச்சாத்திட்டுள்ளனர்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் சனாதிபதி வேட்பாளர் மகிந்த ராஜபக்ஷவுக்கும் ஜே.வி.பியினருக்கும் இடையில் மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தினால் எதிர்காலத்தில் பாரிய யுத்தமும் அழிவும் உருவாகும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கருதுவதாக பாராளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிறேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

## மூன்று தமிழ் இளைஞர்கள் பொலிசாரால் கைது

கொழும்பில் மூன்று தமிழ் இளைஞர்களை பொலிசார் கைது செய்துள்ளனர். கைது செய்யப்பட்ட இந்த இளைஞர்களிடமிருந்து 40 இலட்சம் ரூபா பெறுமதியான போதைப்பொருட்கள், பணம் மற்றும் தங்கநகைகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

கொழும்பு ஆமர் வீதியில் நேற்று முன்தினம் புதன்கிழமை காலை விசேட அதிரடிப்படையின் விசேட நடவடிக்கைகள் பிரிவினால் இம்மூவரும் கைது செய்யப்பட்டுள்ளனர். ஓட்டோவில் வந்தபோது கைது செய்யப்பட்ட இம்மூவரிடமிருந்து 40 இலட்சம் ரூபா பெறுமதியான ஹெரோயின் பத்து இலட்சம் ரூபா பெறுமதியான தங்க நகைகள் மற்றும் பணநோட்டுகள்,வெளிநாட்டு நாணயங்கள் மற்றும் கிரனேட் ஒன்று இருந்துள்ளதாகவும் கூறப்படுகிறது. அவர்கள் வந்த ஓட்டோவும் கைப்பற்றப்பட்டுள்ளது.

## மட்டக்களப்பில் கொல்லப்பட்டவர் அடையாளம் காணப்பட்டார்

மட்டக்களப்பு நகரிலுள்ள இ.போ.ச டிப்போ அருகாமையில் நேற்று முற்பகல் சிறிலங்கா பொலிசாரால் சுட்டுக்கொல்லப்பட்ட துப்பாக்கிதாரி வன்குடாவெளியைச் சேர்ந்த ஜெகன் எனப்படும் ராசலிங்கம் சிவலோகநாதன் (வயது-28) என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

கருணா குழுவைச்சேர்ந்த இவர் நகரில் இளைஞர் ஒருவரைச் சுட்டுவிட்டு தப்பியோடிய சமயம் டிப்போ பொலிஸ் காவல்நிலையத்திலிருந்த பொலிசார் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் கொல்லப்பட்டார்.

அதே சமயம் மட்டக்களப்பு நகரில் நேற்று முன்தினம் புதன்கிழமை மாலை சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக்கொல்லப்பட்ட மாமாங்கம் வாசியான சிங்கரத்தினம் கமலாசனின் உடலை உரிமைகோர எவரும் இதுவரை முன்வரவில்லை.

சடலத்தை அரசாங்கச் செலவில் அடக்கம் செய்யுமாறு மட்டக்களப்பு மாவட்ட நீதிபதி எம்.எச்.எம்.ஹசீம் பொலிசாருக்கு உத்தரவிட்டுள்ளார்.

இவருடன் கைதான காயான்மடு வாசியான சின்னத்தம்பி பாலேஸ்வரனை எதிர்வரும் 22ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நேற்று நீதிமன்று பணித்துள்ளது.

### உயர்மட்ட...

ரிடம் அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இந்தச் சந்திப்பை ஏற்படுத்தியதற் கான காரணம் என்ன? என்று கேட்டபோது கிழக்கின் பாதுகாப்பற்ற நிலைமைகள் தொடர்பாக விடு தலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனுடன் கலந்துரையாடவே இந்தச்சந்திப்பை மேற்கொண்டோம். போர்நிறுத்த உடன்படிக்கை தற்போது அபாயகரமானநிலையிலுள்ளது என்றார். உங்களது அடுத்தகட்ட நடவடிக்கை என்ன என்று கேட்டபோது தற்போது சூழலை கவனத்திலெடுத்து தொடர்ந்து முயன்றுவருகிறோம் என்றார்.

### சவுதி...

தகவல் வந்தது.

இதனையடுத்து விமானம் புறப்பட்டு சிறிது தூரம் சென்ற நிலையில் மீண்டும்அவசரமாகத் தரையிறக்கப் பட்டது.

விமானத்திலிருந்து பயணிகளை இறக்குவதற்காக வழமையாக பயன்படுத்தப்படும் படிக்கட்டுகளுக்குப் பதிலாக அவசர காலத்தின்போது பயன்படுத்தப்படும் வழுக்கிச் செல்லும் பாதையே போடப்பட்டுள்ளது. எனினும் பயணிகள் இறக்க முற்பட்டவேளை அந்த வழுக்குப்பாதை உடைந்து விழுந்ததால் ஒருவர் உயிரிழந்துள்ளார். 50 பேர் காயமடைந்துள்ளனர்.

காயமடைந்தவர்கள் நீர்கொழும்பு வைத்தியசாலையிலும் கொழும்பு தேசிய வைத்தியசாலையிலும் அனுமதிக்கப்பட்டுள்ளனர். காயமடைந்தவர்களில் பலரின் நிலை கவலைக்கிடமாக இருப்பதாகக் கூறப்படுகிறது.

தற்போது இராணுவத்தினரும் குண்டைச் செயலிழக்கச் செய்யும் பிரிவினரும் விமானத்தில் சோதனை நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.

### விசேட...

இவர்கள் மட்டக்களப்பிலிருந்து கல் ஏற்றிச்சென்ற வேளையிலேயே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளதாகத் தெரியவருகின்றது. இத் துணிகரத் தாக்குதலை நடத்தியவர்கள் தாக்குதலை நடத்திவிட்டு தப்பிச் சென்றுள்ளதாகத் தெரிய வருகின்றது.

தமது சுற்றுக்காவல் நடவடிக்கைகளை மாலை 4.00 மணியளவில் முடித்துக்கொண்டு மண்முனை முகாமுக்கு வழமைபோல் கால்நடையாக சிங்கள இராணுவத்தினரும் பொலிசாரும் திரும்பிக்கொண்டிருந்தபோது இத்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

உந்துருளியில் வந்த இரண்டு நபர்களே இத்தாக்குதலை மேற்கொண்டுவிட்டு தப்பிச்சென்றுள்ளதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

### வெற்றிலைச்...

இம்முறை தேர்தலில் ஜே.வி.பி. பிரதமரை ஆதரிக்கத் தீர்மானித்துள்ளதால் வெற்றிலைச் சின்னத்தின் கீழ் பிரதமர் போட்டியிடுவதே உசிதமென அவருக்கு நெருக்கமானவர்கள் கூறியுள்ளனர்.

சுதந்திரக்கட்சி உட்பட பல அரசியல் கட்சிகளின் தலைவர்கள் கலந்துகொண்ட கூட்டம் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

வெற்றிலைச்சின்னத்தின் கீழ் போட்டியிடுவது பற்றி அக்கூட்டத்தில் ஆலோசனை முன்வைக்கப்பட்டது.

மகிந்தராஜபக்ஷவின் கொள்கைப் பிரகடனத்தை பொதுசன ஐக்கிய முன்னணியைச் சேர்ந்த பிரதிநிதிகள் அடங்கிய குழுவொன்று தயாரிப்பது என்றும் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

தேர்தல் பிரச்சார நடவடிக்கைகள் கண்டியிலிருந்து அல்லது அநுராதபுரத்திலிருந்து தொடங்கப்படும் என்று சுதந்திரக்கட்சியினர் தெரிவித்தனர்.

இந்தப் பிரச்சார கூட்டங்களில் ஜே.வி.பி.யும் பங்கேற்கின்றது.

வேட்பு மனுத்தாக்கல் செய்த பின்னரே பிரச்சார நடவடிக்கைகள் தொடங்கும் என்றும் மாகாணங்களில் நடைபெறும் தேர்தல் பிரச்சாரக் கூட்டங்களில் மட்டும் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கலந்துகொள்ளக் கூடும் என்றும் அக்கட்சி வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 09 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.